**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI**

# O.S. NO. 214/2018 P.W.1

Deposition of Witness for the Petitioner / Respondents Solemnly affirmed by of this Court on **13.03.2020** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| Name: திரு.சுரேஷ்குமார் | Father's Name: |
| Caste: | Religion: |
| Village: | Taluk: |
| Calling: | Age: |

**வாதி தரப்பில் 1வது சாட்சியின் முதல் விசாரணை:**

இந்த வழக்கில் நான் வாதி தரப்பு 1வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அதில் சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தும் படித்து பார்த்து கையொப்பம் போட்டேன். 24.02.1964ஆம் தேதியிட்ட பிராது சொத்தின் கிரைய பத்திர சான்றிட்ட நகல் வாசாஆ.1. முனியாண்டி என்பவரின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வாசாஆ.2. முனியாண்டியின் வாரிசு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வாசாஆ.3. முணியான்டி வாரிசுகள் பெயரில் ஏற்பட்ட பட்டா பாஸ்புத்தகத்தின் ஜெராக்ஸ் நகல் வாசாஆ.4. முனியாண்டி வாரிசுகள் புஷ்பராணி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.5. புஷ்பராணி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் பதிவிறக்க நகல் வாசாஆ.6. தவமணி என்பவர் உமாதேவிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் வாசாஆ.7. உமாதேவி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் பதிவிறக்க நகல் வாசாஆ.8. பிரதிவாதியும் நானும் தாவா சொத்து சம்பந்தமாக எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அசல் வாசாஆ.9. தாவா சொத்து சம்பந்தமாக நான் வாங்கிய வில்லங்க சான்றிதழின் நகல் வாசாஆ.10. பிரதிவாதிக்கும் எனக்கும் கிரைய ஒப்பந்த சம்பந்தமாக ஏற்பட்ட

தகராறில் நான் பிரதிவாதியின் மீது கொடுத்த முதல் தகவலறிக்கையின் நகல் வாசாஆ.11. தாவா சொத்து சம்பந்தமாக எடுத்த வில்லங்க சான்றிதழ் அசல் வாசாஆ.12. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.